RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-346 | 12 டிசம்பர் | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ‘தமிழுக்கும் தமிழ் சமூகத்துக்கும் தொண்டு செய்த பாரதி வாழிய!’ முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, டிச.12

மகாகவி பாரதியாரின் 143வது பிறந்தநாளையொட்டி அவரது உருவப்படத்துக்கு தமிழக அரசு சார்பில் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.



சென்னை: “மொழி, நாடு, பெண் விடுதலை, பிற்போக்குத்தனங்கள் எதிர்ப்பு எனத் தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கும் தொண்டுசெய்த பாரதி வாழிய!” என்று மகாகவி பாரதியாரின் 143வது பிறந்தநாளையொட்டி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் தனதுசமூகவலைதளப் பக்கத்தில், “உய்வகை காட்டும் உயர்தமிழுக்குப் புது நெறி காட்டிய புலவன்! தமிழ்க் கவியில், உரைநடையில், தனிப் புதுமை படைத்த செந்தமிழ்த் தேனீ மகாகவி பாரதியாரின் பிறந்தநாளில் அவரை வணங்குகிறேன்! மொழி, நாடு, பெண் விடுதலை, பிற்போக்குத்தனங்கள் எதிர்ப்பு எனத் தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கும் தொண்டுசெய்த பாரதி வாழிய!” என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

முன்னதாக, சென்னை மெரினா கடற்கரை சாலையில் உள்ள மகாகவி பாரதியாரின் உருவச்சிலைக்கு கீழ் வைக்கப்பட்டிருந்த அவரது உருவப் படத்துக்கு தமிழக அரசு சார்பில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், சேகர்பாபு மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

## பாஜக எம்பிக்களுக்கு ரோஜா பூ, தேசியக்கொடி பரிசளிப்பு: இண்டியா கூட்டணி எம்பி.,க்கள் நூதன போராட்டம்

புதுடெல்லி, டிச.12

அதானி விவகாரத்தை நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தும் நோக்கில் இண்டியா கூட்டணி எம்பிக்கள் பாஜக எம்பிக்களுக்கு ரோஜா பூ மற்றும் தேசியக் கொடியை பரிசளித்தனர்.



நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்பாக வாசலில் குழுமியமக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட இண்டியா கூட்டணி எம்பிக்கள், நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த பாஜக எம்பிக்களுக்கு ரோஜா பூ மற்றும் தேசியக் கொடியை பரிசளித்தனர். பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கு ராகுல் காந்தி ரோஜா பூ மற்றும் தேசியக்கொடியை பரிசளித்தார்.

இதுபற்றி செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாக்கூர், “பாஜக நண்பர்களுக்கு ரோஜா பூ மற்றும் தேசியக் கொடியை பரிசளிப்பதற்காக நாங்கள் நாடாளுமன்ற வாயிலில் கூடி இருக்கிறோம். அனைத்தையும்விட நாடே முக்கியம் என்ற செய்தியை இதன்மூலம் வழங்கவே இதைச் செய்கிறோம்.” என தெரிவித்தார்.

காங்கிரஸ் எம்பி வர்ஷா கெய்க்வாட் கூறும்போது, “தேசியக் கொடியை விநியோகித்தோம். நாட்டை விற்க வேண்டாம் என்றும், நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டோம். துரதிர்ஷ்டவசமாக, தற்போது அதானிதான் நாட்டை நடத்துகிறார் என்பதைப் பார்க்கிறோம். அனைத்தும் அவருக்குத்தான் கொடுக்கப்படுகிறது. ஏழைகளின் குரல் நசுக்கப்படுகிறது. நாட்டை விற்கும் சதிக்கு எதிராக நாங்கள் இருக்கிறோம்.” என குறிப்பிட்டார்.

மற்றொரு காங்கிரஸ் எம்பி சுக்தியோ பகத் கூறுகையில், “பாஜக அரசு நாடாளு மன்றத்தை தவறாக நடத்துகிறது. அதானியின் பெயர் வந்தவுடனேயே அவை ஒத்திவைக்கப்படுகிறது. நாடாளு மன்ற நடத்தைக்கு உட்பட்டே நாங்கள் தேசியக் கொடியை விநியோகிக்கிறோம்.” என்று கூறினார்.

காங்கிரஸ் எம்.பி.,க்களின் இந்த செயல் குறித்து பேட்டி அளித்த பாஜக எம்பி நிஷிகாந்த் துபே, “எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் என்னை பேச விடுவதில்லை. நான்காவது நாளாக என்னுடைய ஜீரோ ஹவர் வீணடிக்கப்பட்டது. அவர்கள் எனது குரலை அடக்குகிறார்கள். இவ்வளவு கீழ்த்தரமாக செயல்படும் எதிர்க்கட்சியை நான் பார்த்ததில்லை.” எனக் குறிப்பிட்டார்.

## திருவண்ணாமலை மகா தீபம்: பக்தர்கள் மலையேற அனுமதி கிடையாது: அமைச்சர் சேகர்பாபு

சென்னை, டிச.12

திருவண்ணாமலையில் மகா தீப தினத்தன்று, மலையேற பக்தர்களுக்கு அனுமதி இல்லை. பரணி தீபத்துக்கு மட்டும் 300 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, என்று தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.



சென்னையில் தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு இன்று (டிச.11) செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: தீப திருவிழா தொடங்குவதற்கு முன்பே கடந்த மாதம் 18ம் தேதி துணை முதல்வர் உதயநிதி கிரிவலப் பாதையை ஆய்வு செய்தார். அம்மாவட்ட அமைச்சர் எ.வ. வேலு மற்றும் நானும் மூன்று முறை கள ஆய்வு செய்தோம். மாவட்ட ஆட்சியர் தலைமையில் கலந்தாய்வு கூட்டத்தையும் நடத்தினோம்.

அதைத்தொடர்ந்துதலைமைச் செயலாளர் தலைமையில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் இயக்குநர் தலைமையில் நியமிக்கப்பட்ட பேராசிரியர் பிரேமலதா தலைமையில் ஏற்படுத்தப்பட்ட 8 பேர் கொண்ட குழுவினர் கடந்த 7,8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் கள ஆய்வு செய்து அதுதொடர்பான அறிக்கையை நேற்று சமர்ப்பித்துள்ளனர். அந்த அறிக்கையின் அடிப்படையில், இந்துசமய அறநிலையத்துறை அதிகாரிகளுடன் தலைமைச் செயலாளர் தலைமையில் கூட்டம் நடைபெற்றுள்ளது.

அந்த அறிக்கையில், “அதிகமான மனிதர்களை மலையின் மீது ஏற்றக்கூடாது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த முறை பக்தர்கள் யாரும், மலையின் மீது ஏற அனுமதி கிடையாது. அதுதொடர்பான அறிவிப்பை அம்மாவட்ட ஆட்சியர் முறையாக வெளியிடுவார். அதேநேரம், மலை உச்சியில் தீபம் ஏற்ற மேலே கொண்டு செல்ல வேண்டிய பொருட்கள், 350 கிலோ கொண்ட திரி உள்ளிட்ட மற்ற பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. முதல் நாளுக்கு தேவைப்படுகிற 40 டின் நெய், அதாவது ஒரு டின்னுக்கு 15 கிலோ என்றால் 600 கிலோ நெய்யை மேலே கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

அதை எடுத்துச் செல்லும் நபர்களுக்குத் தேவையான உணவு, காவலர்கள், வனத்துறை உட்பட எவ்வளவு நபர்கள் செல்ல வேண்டும் என்று அறிக்கையில், அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தளவுக்கு மட்டுமே மனிதசக்தி பயன்படுத்தப்படவுள்ளது. ஏற்கெனவே இந்த தீபத்துக்காக, ஆவினிடமிருந்து 4500 கிலோ நெய் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பரணி தீபத்துக்கு மட்டும் 300 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## வன்னியர் உள் இடஒதுக்கீடு சட்டத்தை உடனடியாக நிறைவேற்ற கோரி டிச.24ல் ஆர்ப்பாட்டம்: ராமதாஸ்

சென்னை, டிச.12

வன்னியர்களுக்கு உள் இடஒதுக்கீடுவழங்கும் சட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், வட்டத் தலைநகரங்களிலும் பாமக சார்பில் டிசம்பர் 24ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என பாமக நிறுவனர் ராமதாஸ் அறிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், “தமிழ்நாட்டில் வன்னியர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்க எந்தத் தடையும் இல்லை; உரிய தரவுகளைத் திரட்டி வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து டிசம்பர் 24ஆம் நாளுடன் 1000 நாட்கள் ஆகின்றன. உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்த முதல்வர் மு.க. ஸ்டாலின், இப்போது வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க முடியாது என்று அறிவித்து பெருந்துரோகம் இழைத்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் 20% இட ஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு 10.50% உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டது செல்லாது என்று கூறி சென்னை உயர் நீதிமன்றம் அளித்தத் தீர்ப்பை தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், வன்னியர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்க தமிழ்நாடு அரசுக்கு அனைத்து அதிகாரங்களும் உண்டு; போதிய தரவுகளைத் திரட்டி வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்கத் தீர்ப்பை கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாள் வழங்கியது.

அதன்பின் நேரடியாக சந்திப்பு, மனுக்கள், கடிதம், சம்பந்தப்பட்ட துறைகளின் அதிகாரிகளுடன் கலந்தாய்வு என நூற்றுக்கும் மேற்பட்ட முறை வன்னியர்களுக்கு இட ஒதுக்கீட்டை வழங்க வேண்டியதன் தேவையை பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தியது. இவை அனைத்தையும் கடந்த கடந்த ஆண்டு டிசம்பர் 29 ஆம் நாள் முதல்வரை சந்தித்த நான், வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தினேன். ஆனால், அவை அனைத்தும் விழலுக்கு இரைத்த நீராகிவிட்டன.

வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததற்கு பிந்தைய சில மாதங்களில் வன்னியர்களுக்கு உள் ஒதுக்கீடு கண்டிப்பாக வழங்கப்படும் என்று சட்டப் பேரவையிலேயே முதலமைச்சர் அறிவித்தார். தேவைப்பட்டால், வன்னியர் இட ஒதுக்கீட்டு சட்டத்தை நிறைவேற்றுவதற்காக சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டுவதற்கும் தயாராக இருக்கிறேன் என்று அன்புமணி ராமதாஸ் தலைமையிலான பாமக குழுவினரிடம் வாக்குறுதி அளித்தார்.

ஆனால், இப்போது சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தாமல் வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க முடியாது என்று மாற்றிப் பேசுகிறார். அப்படியென்றால், உடனடியாக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி வன்னியர் இட ஒதுக்கீட்டை வழங்குங்கள் என்று கேட்டால், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை; மத்திய அரசுக்குத் தான் அந்த அதிகாரம் உள்ளது என்று கூறி தட்டிக்கழிக்கிறார்.

வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததன் 1000 ஆம் நாள் வரும் 24 ஆம் நாள் வருகிறது. அன்று தான் சமூகநீதிக்காக குரல் கொடுத்த பெரியாரின் நினைவு நாள். அந்த நாளில், அதாவது வரும் 24 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு, வன்னியர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், வட்டத் தலைநகரங்களிலும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாபெரும் மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர் 17 ஆம் நாள் வன்னிய மக்கள் தொடங்கிய போராட்டம் தான் 21 இன்னுயிர்களை இழந்தாலும் கூட, 20% இடஒதுக்கீட்டை வென்றெடுத்துக் கொடுத்தது. இப்போது அவரது நினைவு நாளில் தொடங்கும் அடுத்தக்கட்ட போராட்டமும் வெற்றியில் தான் முடியும்; வன்னியர் சமூகத்திற்கு சமூகநீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையும், உறுதியும் எனக்கு அதிகமாகவே இருக்கின்றன.

காஞ்சிபுரம் நகரில் நடைபெறும் போராட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தலைமையேற்று நடத்துவார். மற்ற இடங்களில் நடைபெறும் இந்த போராட்டங்களை பாட்டாளி மக்கள் கட்சியின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் தலைமையேற்று நடத்துவர். தமிழ்நாட்டில் சமூகநீதியை நிலைநிறுத்த வேண்டும் என்ற உன்னத நோக்கத்திற்காக நடைபெறும் இந்தப் போராட்டங்களில் அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

## ‘தேர்தலை தனித்தே எதிர்கொள்வோம்’ கேஜ்ரிவால் உறுதி

புதுடெல்லி, டிச.12

டெல்லி சட்டப்பேரவைத் தேர்தலை தனித்தே எதிர்கொள்ளப் போவதாக ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கேஜ்ரிவால் தெரிவித்துள்ளார். காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்து ஆம் ஆத்மி வரவிருக்கும் தேர்தலை எதிர்கொள்ளக் கூடும் என்ற ஊகங்கள் எழுந்த நிலையில் அவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக கேஜ்ரிவால் தனித்துப் போட்டி என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.



அடுத்த அடி.. முன்னதாக நேற்று டெல்லி சீலாம்பூர் தொகுதி ஆம் ஆத்மி எம்எல்ஏ அப்துல் ரஹ்மான் அக்கட்சியிலிருந்து விலகி காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். ஆம் ஆத்மியில் முஸ்லிம்க ளின் உரிமைகள் புறக்கணிக்கப்படுவதாகக் கூறி அவர் கட்சியிலிருந்து விலகினார். இது ஆம் ஆத்மி கட்சிக்கு மற்றுமொரு அடியாகப் பார்க்கப்படுகிறது. இந்நிலையில் தான் சட்டப்பேரவைத் தேர்தல் காங்கிரஸுடன் கூட்டணி இல்லை, தனித்தே போட்டி என்று கேஜ்ரிவால் உறுதிப்படுத்தியுள்ளார்.

மூன்றாவது முறைக்காக.. டெல்லி சட்டப்பேரவைக்கு கடந்த 2020ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் மொத்தம் உள்ள 70 இடங்களில் ஆம் ஆத்மி கட்சி 62 இடங்களில் வென்று ஆட்சியை பிடித்தது. பாஜக 8 தொகுதிகளில் வென்றது, காங்கிரஸ் கட்சி ஒரு இடத்திலும் வெற்றி பெறவில்லை.

இந்நிலையில் டெல்லி சட்டப்பேரவைக்கு அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் தேர்தல் நடைபெற உள்ளது.

31 வேட்பாளர்கள் அறிவிப்பு: முதல் வேட்பாளர் பட்டியலை ஆம் ஆத்மி கடந்த மாதம் 21ம் தேதி வெளியிட்டது. அதில் 11 வேட்பாளர்களின் பெயர்கள் இடம் பெற்றிருந்தன. தொடர்ந்து 2வது வேட்பாளர் பட்டியல் நேற்று முன் தினம் வெளியிடப்பட்டது. இதில் நிதி மோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் துணை முதல்வர் மணீஷ் சிசோடியா உட்பட 20 வேட்பாளர்களின் பெயர்கள் இடம் பெற்றிருந்தன. பத்பர் கன்ஜ் தொகுதி எம்எல்ஏவாக இருக்கும், மணீஷ் சிசோடியா வரும் தேர்தலில் ஜங்புரா தொகுதி வேட்பாளராக நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

ஆட்டோ ஓட்டுநர்களுக்கு வாக்குறுதி.. வேட்பாளர்கள் அறிவிப்போடு நின்றுவிடாமல், டெல்லி சட்டப்பேரவைக்குத் தேர்தலை முன்னிட்டு ஆட்டோ ஓட்டுநர்களுக்கு 5 வாக்குறுதிகளை அரவிந்த் கேஜ்ரிவால் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “1. ஒவ்வொரு ஆட்டோ ஓட்டுநருக்கும் ரூ. 10 லட்சம் வரை ஆயுள் காப்பீடும் ரூ.5 லட்சம் விபத்துக் காப்பீடும் வழங்கப்படும். 2. ஆட்டோ ஓட்டுநர்களின் மகள்களின் திருமணத்திற்காக ரூ. 1 லட்சம் நிதி உதவி அளிக்கப்படும். 3. ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைப் படியாக ஆண்டுக்கு இருமுறை ரூ. 2,500 வழங்கப்படும்.

4. போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் அவர்களின் குழந்தைகளுக்கான பயிற்சிக்கான செலவை அரசே ஏற்கும். 5. சவாரிக்கு முன்பதிவு செய்து அழைக்க உதவும் ‘Ask App’ செயலி மீண்டும் தொடங்கப்படும்“ என தெரிவித்துள்ளார். மேலும் அவர், நாங்கள் முன்பும் அவர்களுடன் நின்றோம், எதிர்காலத்திலும் அவர்களுடன் நிற்போம் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

## மறு அறிவிப்பு வரும் வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் நாகை மீனவர்களுக்கு எச்சரிக்கை

நாகப்பட்டினம், டிச.12

நாகை மாவட்ட விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் இன்று முதல் மறு அறிவிப்பு வரும் வரை கடலுக்குச் செல்ல மீன்வளத்துறை தடை விதித்துள்ளது. ஏற்கெனவே கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் உடனடியாக கரை திரும்பவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக உருமாறி உள்ளது. இது மேலும் வலுவடைந்து டெல்டா கரையை நோக்கி நகரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட பல மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் வங்கக் கடல் பகுதியில் காற்றின் வேகம் 45 முதல் 55 கிமீ வரை வீசக்கூடும் என்பதால் மறு அறிவிப்பு வரும் வரை நாகை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என நாகை மாவட்ட மீன்வளத்துறை அறிவித்துள்ளது.

இதனால் நாகை மாவட்டத்தில் உள்ள நாகூர் பட்டினச்சேரி துவங்கி கோடியக்கரை வரை உள்ள சுமார் 25க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மற்றும் 3500க்கும் நாட்டு படகுகள் கடலுக்கு மீன்பிடி தொழிலுக்கு செல்லாமல் அந்தந்த படகு நிறுத்தும் தளத்தில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே கடலுக்குச் சென்ற விசைப்படகுகள் உடனடியாக கரை திரும்ப வேண்டும் எனவும் மீன்வளத் துறை அறிவித்துள்ளது. மீனவர்களுக்கு வழங்கப்படும் டோக்கன் மற்றும் டீசல் ஆகியவை நேற்று நள்ளிரவு முதல் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் மீன்வளத் துறையினர் தெரிவித்துள்ளனர்.



வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு தாலுகா, பல்லாலகுப்பம் ஊராட்சியில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு, குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி அரசு அனைத்து துறைகள் சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள், பயனாளிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## தேசிய விருதினை பெற்ற பம்மல் அன்னை தெரசா மாற்றுத்திறனாளி நலவாரிய இயக்குனர்

செங்கல்பட்டு டிச12

செங்கல்பட்டு மாவட்டம் புதுடில்லியில் மத்திய அரசு சார்பாக குடியரசு தலைவரின் திருகரங்களால் தலைசிறந்த மாற்றுத் திறனாளிக்கான தேசிய விருதை தமிழகத்தை சார்ந்த பம்மல் அன்னை தெரசா மாற்றுத்திறனாளி வெல்பர் டிரஸ்ட் இயக்குனர் கவிதா அவர்களுக்கு வழங்கப் பட்டது. பல்லாவரம் அடுத்த பம்மல் அன்னை தெரசா மாற்றுத் திறனாளி வெல்பர் டிரஸ்ட் அதன் இயக்குனர் கவிதா அவர்கள் சுமார் 5 ஆண்டு மேலாக சமூகப் பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றனர். சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டத்தில் உள்ள பகுதிகளில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு கொடுக்கப்படும் சலுகைகளை பெற்று தந்து தங்களுடைய சேவைகளை புரிந்து வருகின்றனர்.



இவர்களுடைய சேவையை பாராட்டி மத்திய அரசு குடியரசு தலைவர் அவர்களின் திருகரங்களால் தலைசிறந்த மாற்று திறனாளிக்கான தேசிய விருதினை பம்மல் அன்னை தெரசா மாற்றுத் திறனாளி வெல்பேர் டிரஸ்ட் இயக்குனர் கவிதா அவர்களுக்கு வழங்கப்பட்டது. புதுடெல்லியில் இருந்து சென்னையை திரும்பிய கவிதா அவர்களுக்கு மாற்றுத் திறனாளிகள். மற்றும் சமூக ஆர்வலர்கள் அறக்கட்டளை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் மலர்களை தூவி சால்வை மற்றும் .மாலைகள் அணிவித்து கௌரவப்படுத்தினர் இவர்களுடன் . வித்தியாசாகர், அருணகிரி,கோவிந்தராஜன், பம்மல் பாலு,கவிஞர் செல்வ ராஜ்.ஆவடி லதா. ரங்கன் சரசு மண்டபம். குமரன். பம்மல் கலா. தேவி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## மானாமதுரையில் பாதுகாப்பான பயணம் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

மானாமதுரை டிச12

சிவகங்கை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் மற்றும் போக்குவரத்து துறை சார்பில் மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் பாதுகாப்பான பயணம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இதில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பாக மாவட்ட மகளிர் அதிகாரம் மையப் பணியாளர்கள் மற்றும் ஒருங்கிணைந்த சேவை மையப் பணியாளர்களால் பாதுகாப்பான பயணம் குறித்தும் பெண்கள் 181 குழந்தைகளுக்கான 1098 உதவி எண்கள் சமூக நலத்திட்டங்கள் குறித்தும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இதில் போக்குவரத்து சார்பு ஆய்வாளர் ஜெயமாரி, சைல்டு லைன் அலுவலர், சத்தியமூர்த்தி, சரவணன். சமூக நலத்துறை அலுவலர்கள் நித்யா,பவானி ஈஸ்வரி மைய நிர்வாகி சுகன்யா செல்வி. சங்கரா அபர்ணா கலந்து கொண்டனர்.



## நாளை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் தகவல்

சிவகங்கை டிச12

சிவகங்கை மாவட்டம், டிசம்பர் 2024 இரண்டாம் வாரத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகின்ற நாளை (13.12.2024 வெள்ளிக்கிழமை) முற்பகல் 10.30 மணியளவில் தேவகோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற உள்ளது. மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.






சிவகங்கை மாவட்டம் அரசனூரில் போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு: பாண்டியன் சரஸ்வதி யாதவா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் சி.சுப்பிரமணியன் முன்னிலையில் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஷி. வெங்கடேசன் உறுதிமொழியை வாசிக்க கல்லூரியில் பயிலும் இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். மேலும் இந்நிகழ்ச்சியில் அனைத்து துறை தலைவர்களும் மற்றும் பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

## தாம்பரத்தில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கல்வெட்டை திறப்பு -பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள்






காளையார் கோவில் டிச12

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்தநாள் விழா நேற்று நடைபெற்றது தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். ஹரிவரா சிரியர் ஆரோக்கியசாமி முண்டாசுக் கவிஞன் பாரதி பிறந்த நாள் ஏன் வருடந்தோறும் கொண்டாடுவது குறித்துநோக்க வுரையாற்றினார். பாரதியாரின் முகமூடி அணிந்து மாணவ மாணவிகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். இந்திய சுதந்திரத்திற்காக தேச பக்தி பாடல்களை பாடி விடுதலைப் போராட்ட வீரராக செயல்பட்டதையும் பெண் விடுதலை சாதிமறுப்புகுழந்தைதிருமணம் இவற்றிற்காக எதிர்த்து குரல் கொடுத்த பாரதியின் வீரமிக்க செயல்பாடுகள் நினைவு கூறப்பட்டது. ஆசிரியை கமலம் பாய் நன்றி கூறினார். விழா ஏற்பாட்டினை அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி சிறப்பாக செய்திருந்தார்.



## வேலூரில், அன்புக்கரங்கள் அறக்கட்டளை சார்பில் டாக்டர்.ஐடாஸ்கடர் 154ம் பிறந்தநாள் முன்னிட்டு நலதிட்ட விழா

வேலூர் டிச12

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, சோலை அரங்கத்தில் அன்புக்கரங்கள் அறக்கட்டளை சார்பில் டாக்டர்.ஐடாஸ்கடர் அவர்களின் 154ம் பிறந்தநாள் முன்னிட்டு நலத்திட்டம் வழங்கும் விழா, பொருளாளர் ஆர். தேவபிரகாசம் தலைமையிலும், திருவுநாவுகரசு வரவேற்புரையில், லாரி உரிமையாளர் டி.கே.டி குமார், பேராசிரியர் ஞானக்கண், பி.தேவநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக வி.ஐ.டி. பல்கலைக்கழகம் வேந்தர். டாக்டர். விஸ்வநாதன் கலந்து கொண்டு, அமரர் குணசேகரன் ஆர்.ஆனந்தன் ஆகியோரின் படம் திறந்து வைத்து, சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சிஎம்சி மருத்துவமனை அறுவை சிகிச்சை துறை தலைவர் டாக்டர். எஸ்இனியன் சமரசம், பாஸ்கரன், சோலைநாதன், ஆண்ட்ரூஸ், இலக்குமிபதி, கலைமகள் இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக ஜெயராஜ், வா.ரா. பிரேம்ஆனந்த், சுப்பிரமணி, குருசாமி, விவேகானந்தன், பட்டாபி, நெல்சன் விமலநாதன், யூசப், மாரியப்பன், மாரிமுத்து, சுரேஷ், கணேசன், பாலாஜி, ஆண்ட்ரூஸ் மற்றும் வேலு ஆகியோர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சி தொகுப்பு இன்பழிலன் மற்றும் ரெஜி, விருந்தோம்பல் லத்தேரி எல்.என்.ரவி, நிகழ்ச்சி ஏற்பாடு டாக்டர்.ஐடாஸ்கடர் அன்புகரங்கள் அறக்கட்டளை தலைவர் ஜி.தவசீலன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த நலத்திட்ட விழாவில் சுமார் 200க்கும் மேற்பட்டோருக்கு நலதிட்ட உதவிகளை வழங்கி விழாவை சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து விழா இறுதியில் ரவிக்குமார் நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது.



## டங்ஸ்டன் சுரங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த அனைத்து கட்சிக்கும் நன்றி தெரிவித்த மக்கள் முன்னேற்ற கழக நிறுவன தலைவர்

பெரியகுளம் டிச.12

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் மக்கள் நலம் முன்னேற்றக் கழக நிர்வாகிகள் கூட்டத்தில் நிறுவனத் தலைவர் இரா. கணேசன் கலந்து கொண்டு அறிக்கையை வெளியிட்டார். இதில்



மதுரை மாவட்டம் அரிட்டாபட்டி, மீனாட்சிபுரம், தெற்குத்தெரு, நரசிங்கம்பட்டி, புலிப்பட்டி, எட்டிமங்கலம், வெள்ளரிப்பட்டி, கிடாரிப்பட்டி, ஆமூர், எட்டிமங்கலம், சென்னகரம்பட்டி, கம்பூர், கேசம்பட்டி, கருங்காலக்குடி, அய்யாபட்டி, கச்சிராயன்பட்டி மற்றும் தும்பைப்பட்டி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் நடந்த கிராம சபை கூட்டத்தில் டங்ஸ்டன் சுரங்கத்திற்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதனிடையே 09.12.2024 நடந்த தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தில் அரிட்டாபட்டி டங்ஸ்டன் திட்டத்திற்கு எதிராக கொண்டு வரப்பட்டு அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதற்காக தமிழ்நாடு அரசுக்கும் அனைத்து கட்சிகளுக்கும் நமது மக்கள் நல முன்னேற்ற சங்கம் சார்பாக நன்றிகளும் பாராட்டுகளையும் தெரிவிக்கிறோம்.

மேலும் மதுரை மாவட்டம் அதனை சுற்றியுள்ள தேனி, சிவகங்கை ராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி,ஆகிய மாவட்டங்களை அடங்கிய அனைத்து சேர்த்து ஒருங்கிணைத்து பாதுகாக்கும் மண்டலமாக மாவட்டங்களை ஒருங்கிணைத்து கலை, இலக்கியம், பண்பாடு, கலாச்சாரம், பாதுக்கும் மண்டலமாக மத்திய மாநில அரசுகள் அறிவிக்க வேண்டும் என்று நமது சங்கம் சார்பாக வலியுறுத்த வேண்டும். நிகழ்ச்சியில் மாநில செயலாளர் சந்திரபாண்டி உள்ளிட்ட நிர்வாகிகள் இருந்தனர்.

## டிச.18 அன்று சிவகங்கை வட்டத்தில் உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் ஆட்சியர் தகவல்

சிவகங்கை டிச12

சிவகங்கை வட்டத்தில் நடைபெறவுள்ளதையொட்டி இன்று 12.12.2024 முதல் 16.12.2024 வரை சிவகங்கை வட்டத்திற்குட்பபட்ட பேரூராட்சி அலுவலகம்,

கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகத்தில், பொதுமக்கள் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை அளிக்கலாம் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தகவல் தெரிவித்துள்ளார்.




அரசாணை (நிலை) எண்:22 நாள்: 29.01.2024ன் படி மக்களை நாடி, மக்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின்படி மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து மாவட்ட அலுவலர்களும் வட்ட அளவில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அரசின் அனைத்து நலத்திட்டங்களும் சேவைகளும் தங்கு தடையின்றி மக்களை சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு சிவகங்கை வட்டத்தில் வருகின்ற 18.12.2024 அன்று "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டம் நடைபெற உள்ளதால் துறை அலுவலர்கள் பொது மக்களிடம் வந்து மனுக்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

இருப்பினும், பொதுமக்கள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக்களை நேரில் கொடுக்க விரும்பினால் இன்று 12.12.2024 முதல் 16.12.2024 வரை சிவகங்கை வட்டத்திற்குட்பபட்ட பேரூராட்சி அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## தென்காசி மாவட்டம் மயிலப்பபுரத்தில் இலவச கண் பரிசோதனை முகாம்

தென்காசி டிச12

தென்காசி மாவட்டம் பாவூர் சத்திரம் சென்ட்ரல் அரிமா சங்கம், கண்தான விழிப்புணர்வு குழு மற்றும் கிறிஸ்தவ வாலிபர் ஐக்கிய சங்கம் இணைந்து அரவிந்த் கண் மருத்துவமனை உதவியுடன் இலவச கண் பரி சோதனை முகாம் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பாவூர்சத்திரம் சென்ட்ரல் அரிமா சங்க தலைவர் LnK.A. ஆனந்த் தலைமை தாங்கினார்கள், கண்தான விழிப்புணர்வு குழு நிறுவனர் LnK.R.P இளங்கோ தொகுப்புரை ஆற்றினார்கள். கண்தான விழிப்புணர்வுக்குழு பொருளாளர் இரா.சந்திரன் வரவேற்புரை ஆற்றினார்கள். சேகரத்தலைவர் Rev. ஜீவாதாமஸ் துவக்கி வைத்தார்கள். மருத்துவர் வினோப்ரிதா ஜார்ஜ் ஆண்ட்ரூஸ் நினைவு பரிசு வழங்கினார்கள்.



செவிலியர்களுக்கு ஞான சிகாமணி செல்லையா நினைவுப் பரிசு வழங்கினார்கள். 130 நோயாளிகளுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு 20 பேர் இலவசமாக கண்புரை அறுவை சிகிச்சைக்காக அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அனைத்து ஏற்பாடுகளையும் ஞானதுரை ஜெயக்கொடி, ஜெபராஜ், அருள் ரெபிசன், அலெக்ஸ்,கிங்ஸ்லின் மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனை ஒருங்கிணைப்பாளர் மாதவன் ஆகியோர் செய்திருந்தனர்.

# வேலூர் விருதம்பட்டில் ஸ்ரீ விஷ்ணு சினிமாஸ் 39ம் ஆண்டு விழா முன்னிட்டு இரத்ததான முகாம்

வேலூர் டிச12

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, விருதம்பட்டில் ஸ்ரீ விஷ்ணு சினிமாஸ் 39ம் ஆண்டு விழா முன்னிட்டு உதவும் கருணை உள்ளம் அறக்கட்டளை வேலூர் சி.எம்.சி.மருத்துவமனை ஸ்கடர் நினைவு மருத்துவ மனை எஸ்.எம்.ஹெச் இராணிப்பேட்டை மற்றும் ரோட்டரி கிளப் ஆப் வேலூர் இனைந்து நடத்திய மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம், பல், தோல், மூட்டுவலி, பொது மருத்துவம் மற்றும் இரத்த தான முகாம் ஸ்ரீ விஷ்ணு சினிமாஸ் உரிமையாளர்கள் கார்த்திகேயன், டில்லி, திருநாவுக்கரசு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக ரோட்டரி மாவட்ட ஆளுநர் டாக்டர். டி.சிவகுமார், வேலூர் சி.எம்.சி மருத்துவமனை



டாக்டர்.டாலிடேனியல், டாக்டர். நிவேதா மகேஷ் ,ஆகியோர் கலந்துகொண்டு குத்து விளக்கேற்றி இரத்ததான முகாமினை துவக்கிவைத்தனர். இம்முகாமில் ஜெயகரன் ஐசக், வி.வி.மகேஷ்குமார், பாமக பிரமுகர் துளசிராமன், ரங்காபுரம் சரவணன், சமுக ஆர்வலர் டாக்டர். நோபல் லிவிங்ஸ்டன் மற்றும் மருத்துவர்கள் செவிலியர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். இம்முகாமில் சுமார் 500க்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில் பிரபலமான AM பேக்கரியின் இளையான்குடியில் சாலையூர் கிளையினை வி.கே.டி.வணிகவளாகம் முன்னாள் அரசு உயர் நீதிமன்ற வழக்கறிஞர் கோவிந்தன், தொழிலதிபர் தனசேகரன் குத்துவிளக்கு ஏற்றி நேற்று திறந்து வைத்தனர்.உடன் AM பேக்கரியின் உரிமையாளர் தென்னரசு உஷா அவரது தம்பி மணி மேலாளர் அஜ்மல்கான் உடனிருந்தனர். புதிதாக திறக்கப்பட்ட கிளையில் மரக்கன்றுகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது. 90வயதான தாயை உரிமையாளர் தென்னரசு தனது இரு கரங்களிலும் தூக்கி சென்று குத்து விளக்கு ஏற்றியது அங்கிருந்தவர்களை நெகிழ்ச்சி அடைய செய்தது.

# பேரணாம்பட்டில் மனு நீதி நாள் முகாம் 128 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கல்

வேலூர் டிச.12

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு தாலுகா, பல்லாலகுப்பம் ஊராட்சியில் 11.12.2024 நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, 128 பயனாளிகளுக்கு ரூ.82.48 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இம்முகாமில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு, பேர்ணாம்பட்டு ஒன்றியக் குழுத்தலைவர் சித்ரா ஜனார்த்தனன், ஆத்ம குழு தலைவர் ஜனார்த்தனன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் உத்திரகுமாரி, ஒன்றிய குழு உறுப்பினர் ஹேமலதா, மகளிர் திட்ட இயக்குநர் நாகராஜன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) கலியமூர்த்தி, மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் இராமசந்திரன், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, பேர்ணாம்பட்டு வட்டாட்சியர் சிவக்குமார், பல்லாலகுப்பம் ஊராட்சி மன்ற தலைவர் ந.கஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் புத்தாண்டு கொண்டாட்டம்

மதுரை, டிச.12

மதுரை மாநகரில் வருகின்ற மதுரை 2025ம் ஆண்டு புத்தாண்டை கொண்டாட மதுரை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் அழகர்கோவில் சாலையில் அமைந்துள்ள ஓட்டல் தமிழ்நாட்டில் மிகவும் பிரம்மாண்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பழமையும், பெருமையும் வாய்ந்த மதுரை மாநகரில் புத்தாண்டு 2025 நிகழ்ச்சியை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஓட்டல் தமிழ்நாடு மற்றும் ஜெ.கே.ஈவண்ட்ஸ் மேனேஜ்மெண்ட் நிறுவனமும் புத்தாண்டை குடும்பத்துடன் இணைந்து மது இல்லா கொண்டாடும் வகையில் சுற்றுலா துறையின் சார்பில் 31 டிசம்பர் 2024 அன்று இரவு 7.00 மணி செய்யப்பட்டுள்ளது.

நடத்துவதற்கு முதல் ஏற்பாடு மதுரை உணவுப்பிரியர்களுக்கான சிறப்பு அசைவ மற்றும் சைவ உணவு வகைகள் பரிமாறபடவுள்ளன.

பாடல், நடனம், குழந்தைகளுக்கான விளையாட்டு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடு மற்றும் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்கான நுழைவுச் சீட்டு மதுரை அழகர் கோவில் சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு ஓட்டலில் கிடைக்கும். முன் பதிவிற்கு 6380699288, 9176995841 என்ற அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, மேலரசம்பட்டு ஊராட்சிகுட்பட்ட தீர்த்தம் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கபபட்டிருந்த மத்திய/மாநில அரசின் சாதனை விளக்கப் புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.





திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பழனி மாவட்ட அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாவட்ட தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் வணிக கட்டிடங்களுக்கான வாடகைக்கு 18சதவிகிதம் ஜிஎஸ்டி வரி விதித்துள்ளது கண்டனத்திற்கு உரியது என்றும், வாடகை கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு என்பது வாடகை தாரர்களையே பாதிக்கும் என்றும், எனவே 18சதவிகித விரிவிதிப்பு என்பதை குறைத்து நிர்ணயம் செய்ய வேண்டும் என மத்திய மாநில அரசுகளுக்கு வணிகர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான வணிகர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகராட்சி மண்டலம் 5 வார்டு எண்.94 குறிஞ்சி நகரில் முல்லைப் பெரியாறு கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்குவதற்காக புதிதாக கட்டப்பட்டுள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் சோதனை ஓட்டமாக நீர் ஏற்றப்படுவதை மாநகர மேயர் இந்திராணி பொன்வசந்த் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் மண்டலத் தலைவர் சுவிதா , தலைமை பொறியாளர் .ரூபன் சுரேஷ் , செயற்பொறியாளர் (குடிநீர்) பாக்கிய லெட்சுமி , உதவி ஆணையாளர் இராதா , மாமன்ற உறுப்பினர் ஸ்வேதா ஆகியோர் உடன் உள்ளனர்.

# செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் முடிச்சூர் பகுதி தொண்டரணி சார்பில் தளபதி தேநீர் கடை வழங்கும் விழா

செங்கல்பட்டு டிச12

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் முடிச்சூர் பகுதி தொண்டரணி சார்பில் தளபதி தேநீர் கடை வழங்கும் விழா நடைபெற்றது

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் முடிச்சூர் பகுதி தொண்டரணி தமிழகம் வெற்றி கழகம் சார்பில் முடிச் சூரில் திருமதி லட்சுமி அவர்கள் வாழ்வதாரம் இருந்து தவிக்கும் ஏழ்மை குடும்பத்தினருக்கு இலவச தளபதி தேநீர் கடை வழங்கும் விழா செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தொண்டரணி டாக்டர் கில்லி சரத்குமார் அவர்கள் தலைமையில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட முடிச்சூர் பகுதி கழக நிர்வாகிகள் தயா, ரிஸ்வான், புஷ்பராஜ், மற்றும் தாஸ் ஏற்பாட்டில் நடைபெற்றது.



இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழக வெற்றி கழக பொதுச் செயலாளர் என்.ஆனந்த் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் சென்னை புறநகர் மாவட்ட தலைவர் இசிஆர் சரவணன் செங்கல்பட்டு மாவட்ட தலைவர் சூர்யா நாராயணன் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தலைவர் மின்னல் குமார், மாவட்ட இளைஞர் அணி தலைவர் தினேஷ், மாவட்ட மாணவரணி தலைவர் பிரவீன் குமார், மாவட்ட வர்த்தக அணி தலைவர் செந்தில், மாவட்ட வழக்கறிஞர் தலைவர் பிரவீன் குமார், செங்கல்பட்டு மாவட்ட தொண்டரணி தலைவர் பாலாஜி, செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தொண்டர் அணி கவுரவத் தலைவர் ராஜேந்திரன், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தொண்டரணி செயலாளர் அகிலன் தாம்பரம் தொகுதி தலைவர் யோகேஸ்வரன் மற்றும் மாவட்ட ஒன்றிய பகுதி கழக நிர்வாகிகள் இளைஞர் அணி மகளிர் அணி பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# குரோம்பேட்டையில் நடைபெற்ற இந்து திராவிட மக்கள் கட்சியின் மாநில பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டம்

செங்கல்பட்டு டிச.12

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை தனியார் மண்டபத்தில் இந்து திராவிட மக்கள் கட்யின் மாநில பொது குழுமற்றும் செயற்குழு கூட்டம் நிறுவனரும், தேசிய தலைவருமான ரமேஷ்பாபுஜி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக இந்து புரட்சி முன்னனி நிறுவனர் சந்திரகுமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் பேசிய நிறுவனர் ரமேஷ்பாபுஜி பேசுகையில் இந்து சுவாமியான ஐயப்பனை இழிவாக பாடிய இசைவானியை கண்டித்து வள்ளுவர் கோட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தபடும் என பல்வேறு கருத்துகள் கூறி 9 தீர்மாணங்கள் நிறைவேற்றபட்டன.



இதில் இந்து திராவிடா மக்கள் கட்சி மாநில, மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள் ஏராளமனோர் கலந்து கொண்டனர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தேசிய தலைவர் ரமேஷ்பாபுஜி பேசுகையில் பல்லாவரத்தில் குடிநீரால் பாதிக்கபட்டு 3 பேர் உயிரிழந்தனர் அவர்களுக்கு தமிழக அரசு 1 கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை உட்பட 9 தீர்மாணங்கள் எனவும் ஆந்திர மாநிலத்தில் வக்பு. வாரியத்தை நீக்கியதை போல் தமிழக அரசு வக்பு. வாரியத்தை நீக்க வேண்டும், இந்து கடவுளான ஐயப்பனை இழிவாக பாடிய இசைவானியை கைது செய்யகோரி வள்ளுவர் கோட்டத்தில் வருகின்ற 12 ஆம் தேதி இந்து திராவிட மக்கள் கட்சியின் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தெரிவித்தார்.

சிவகங்கை நகராட்சி வார்டு எண் 17 மற்றும் வார்டு எண் 8 ஆகிய பகுதிகளில் மழை நீர் வடிகால் பணி, சிறு பாலம் அமைக்கும் பணி மற்றும் சுகாதாரப் பணி ஆகியவற்றை சிவகங்கை நகர்மன்ற தலைவர் சிஎம். துரை ஆனந்த் நேற்று ஆய்வினை மேற்கொண்டு பணியினை விரைந்து முடிக்குமாறு சுகாதார அலுவலரிடம் மற்றும் ஒப்பந்ததாரரிடம் அறிவுறுத்தினர் உடன் நகர்மன்ற உறுப்பினர் வீனஸ் ராமநாதன் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



மாலை தந்தி





மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாற்றுதிறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார்.

## மதுரை மத்திய சிறையில் சிறப்பு மருத்துவ முகாம்




மதுரை: டிச 12

மதுரை மத்தியசிறையில் உள்ள இல்ல வாசிகளின் நலனுக்காக பெங்களூருவை தலைமை இடமாகக் கொண்டு செயல்படும் பிரிசினர்ஸ் ஹோப் மினிஸ்ட்ரி ஆஃப் இந்தியா தொண்டு நிறுவனத்தின் மூலம் கிறிஸ்டியன் பெலோசிப் மருத்துவமனை ஒட்டன் சத்திரம் மற்றும் கிறிஸ்டியன் மருத்துவமனை அம்பிளிக்கை இணைந்து இன்று நடத்திய சிறப்பு மருத்துவ முகாமில் எலும்புமுறிவு, காது, தோல், பல், மற்றும் பொது மருத்துவத்தை சார்ந்த 7 மருத்துவர்களும், 11 மருத்துவ பணியாளர்களும் கலந்து கொண்டனர்.இம்முகாமினை மதுரை சரக சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை துணைத் தலைவர் பழனி தலைமையில் மதுரை மத்திய சிறை கண்காணிப்பாளர் சதீஷ்குமார் முன்னிலையில் நடைபெற்றது.இம்மருத்துவ முகாமில் 200 சிறைவாசிகளும், 11 சிறைப்பணியாளர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

மேலும் பிரிசினர்ஸ் ஹோப் மினிஸ்ட்ரி ஆஃப் இந்தியா தொண்டுநிறுவனத்தின் சார்பாக இயக்குனர் கே .எம் .ரெஜி சாமுவேல் சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக இரண்டு சக்கர நாற்காலிகளை வழங்கினார்.

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறை சார்பில் தேனி மாவட்ட ஆட்சியர் தலைமையில் மக்கள் தொடர்பு முகாம்



தேனி டிச. 12

தேனி மாவட்டம் உத்தமபாளையம் தாலுகா கோகிலாபுரம் ஊராட்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷஜீவனா தலைமையில் நடைபெற்றது

மக்கள் தொடர்பு முகாமில் அமைக்கப்பட்டுள்ள மகளிக்குழு பெண்கள் வைக்கப்பட்டிருந்த கைவினைப் பொருட்கள் சிறு கடைகளை பார்வையிட்டார்

இம்முகாமில் பொதுமக்களிடமிருந்து சுமார் 800 க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது மக்களுக்கு 4 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது

இன்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் தாட்சாயினி, வட்டாட்சியர், ஒன்றிய குழு தலைவர் இன்பென்ட் பணிமய ஜெப்ரின் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர் .



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தாலுகா கடமலை மயிலை ஒன்றிய பகுதிகளில் வைகை ஆற்றங்கரை ஓரம் உள்ள வாலிப்பாறை வருஷநாடு கடமலைக்குண்டு கிராம பகுதிகளில் கழிவுநீர் ஆற்றில் கலந்து சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு புகார் வந்த நிலையில் அந்தப் பகுதியில் அதிகாலை நேரத்தில் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் சஜீவனா நேரில் ஆய்வு கொண்டார் உடன் கடமலை மயிலை ஒன்றிய பெருந்தலைவர் சித்ரா சுரேஷ் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள் உடன் இருந்தனர்.

## சிவகங்கை வட்டத்திற்குட்பட்ட சாலூர் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் 139 பயனாளிகளுக்கு ரூ.36.91 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவி

சிவகங்கை டிச12

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், ஒக்கூர் உள்வட்டம், சாலூர் கிராமத்தில், நேற்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் பிஆர்.செந்தில்நாதன் முன்னிலையில் பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளை, வழங்கி தெரிவிக்கையில்,



தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, அனைத்துத்தரப்பு மக்களையும் பயன்பெறச் செய்து வருகிறார்கள். பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையில், அரசின் நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு நேரடியாக வழங்கிடும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் ஒரு வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தினை தேர்ந்தெடுத்து, அதிலுள்ள கடைக்கோடி கிராமத்திற்கு சென்று, பொதுமக்களின் கோரிக்கைகளைப் பெற்று, தகுதியுடைய பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கென ஒவ்வொரு மாதமும் மக்கள் தொடர்பு முகாம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், நேற்று சிவகங்கை வட்டத்திற்குட்பட்ட சாலூர் கிராமத்தில் நடைபெற்று கொண்டிருக்கும், இம்மக்கள் தொடர்பு முகாமின் மூலம் அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து துறை சார்ந்த முதன்மை அலுவலர்கள் விரிவாக மக்களுக்கு எடுத்துரைத்துள்ளனர்.

இம்மக்கள் தொடர்பு முகாமினை முன்னிட்டு, முன்னதாக பொதுமக்களின் தேவைகள் மற்றும் நலத்திட்டங்கள் தொடர்பாக கோரிக்கை மனுக்கள்பெறப்பட்டு, அதில் தகுதியுடைய மனுக்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு,

அம்மனுதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளும், அதன் பயன்களும் இன்றைய தினம் வழங்கப்படவுள்ளன. இன்றைய தினமும் இம்முகாமின் வாயிலாக பெறப்படும் கோரிக்கை மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீதும் உடன் நடவடிக்கைகள் மேற்கொண்டு உரிய பலன்கள் வழங்கப்படும்.

மேலும், இவ்வூராட்சியை பொறுத்த வரையில், இப்பகுதியில் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருவது மட்டுமன்றி, அனைத்து அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

இதுதவிர, தங்களது கிராமத்தினை மாதிரி கிரமமாக உருவெடுத்திடும் பொருட்டு, அனைத்திலும் சிறந்து விளங்கிடும் வகையில் கிராம மக்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் இருந்திட வேண்டும். கிராமங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறுதொழில்களும் அடிப்படையாக அமைகின்றன. இளைஞர்கள் தொழில் தொடங்கி பிறருக்கு வேலை வாய்ப்பினை வழங்கிடுவதற்கு முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும். அதற்கான அரசின் மானியத்துடன் கூடிய திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனை பெறுவதற்கு துறை சார்ந்த அலுவலகங்களை முறையாக அணுகி, அதன் வாயிலாக தாங்களும் பயன்பெற்று கிராமங்களின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்திட வேண்டும்.

மேலும், இப்பகுதியில் காய்கறி சாகுபடியினை விவசாயிகள் சிறந்த முறையில் மேற்கொண்டு வருவதால், அவை அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு அடிப்படையாக அமைகிறது. அதனை மேம்படுத்திடும் பொருட்டு, அரசின் திட்டங்கள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் துறை ரீதியாக மேற்கொள்ளப்படும். மேலும், பெற்றோர்கள் தங்களது குழந்தைகளின் உயர்கல்வியை ஊக்குவித்து, அவர்களுக்கு உறுதுணையாக இருந்திட வேண்டும். உயர்கல்விக்கென அரசால் தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம் போன்ற திட்டங்கள் வாயிலாக மாதந்தோறும் ரூ.1,000/ உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர, பல்வேறு கல்விக்கடனுதவிகளும் வழங்கிட அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், குழந்தை திருமணங்களை தடுக்கும் வகையில், அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கும் கிராம பொதுமக்கள் உறுதுணையாக இருந்திட வேண்டும். இக்கிராமத்தில், பல்வேறு மேம்பாடு வசதிகள் மற்றும் தங்களின் தேடைவகள் குறித்து பெறப்பட்டுள்ள மனுக்களில், தகுதியுடைய மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்பட்டு, அதற்குரிய பலன்கள் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்தார்.

முன்னதாக, இம்மக்கள் தொடர்பு முகாமில் அரசின் பல்வேறு துறைகள் ரீதியாக அமைக்கப்பட்டிருந்த செயல் விளக்க கண்காட்சியினை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில், 05 பயனாளிகளுக்கு தலா ரூ.20,000/ வீதம் மொத்தம் ரூ. 1,00,000/ மதிப்பீட்டிலான முதலமைச்சரின் நலிந்தோர் உதவித்தொகைக்கான ஆணைகளையும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 02 பயனாளிகளுக்கு தலா ரூ.8,000/ வீதம் மொத்தம் ரூ.16,000/ மதிப்பீட்டிலான திருமண உதவித்தொகைக்கான ஆணைகளையும், 10 பயனாளிகளுக்கு ரூ.29,500/ மதிப்பீட்டிலான கல்வி உதவித் தொகைக்கான ஆணைகளையும், 03 பயனாளிகளுக்கு தலா ரூ.22,500/ வீதம் மொத்தம் ரூ.67,500/ மதிப் பீட்டிலான இயற்கை மரண உதவித் தொகைக்கான ஆணைகளையும், 57 பயனாளிகளுக்கு தலா ரூ.24,000/ வீதம் மொத்தம் ரூ.13,68,000/ மதிப்பீட்டிலான விலையில்லா வீட்டுமனைப்பட்டாக்கான ஆணைகளையும், 10 பயனாளிகளுக்கு பிறப்பு, இறப்புச் சான்று மற்றும் வாரிசுச் சான்று மற்றும் ஆதரவற்ற விதவைச் சான்று ஆகிய சான்றுகளையும், மாவட்ட உணவு, நுகர்வோர் மற்றும் பாதுகாப்புத்துறையின் சார்பில் 07 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் கீழ் 03 பயனாளிகளுக்கு ரூ.11,200/ மதிப்பீட்டிலான உதிரி மலர்கள் பரப்பு விரிவாக்கம் மற்றும் வீரிய ரக காய்கறி பயிர்கள் பரப்பு விரிவாக்கம்கத்திரி, தக்காளி ஆகியவைகளுக்கான நாற்றுகளையும், 02 பயனாளிகளுக்கு தலா ரூ.30,000/ வீதம் மொத்தம் ரூ.60,000/ மதிப்பீட்டிலான நிரந்தர பந்தல் அமைத்தலுக்கான ஆணைகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 03 பயனாளிகளுக்கு ரூ.5,767/ மதிப்பீட்டிலான வேளாண் இடுபொருட்களையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 02 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,05,350/ மதிப்பீட்டிலான உதவி உபகரணங்களையும், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் 02 பயனாளிகளுக்கு ரூ.4,00,000/ மதிப்பீட்டிலான தொழிற் கடனுதவி மானியத்திற்கான ஆணையினையும், மகளிர் திட்டத்தின் சார்பில் 08 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு தலா ரூ.50,000/ வீதம் மொத்தம் ரூ.4,00,000/ மதிப்பீட் டிலான கடனுதவிக்கான ஆணைகளையும், கூட்டுறவுத்துறையின் சார்பில் Q719 இடைய மேலூர் PACCS கீழ் 15 பயனாளிகளுக்கு ரூ.11,28,100/ மதிப்பீட்டிலான வாழை, நெல் மற்றும் கரும்பு ஆகியவைகளுக்கான பயிர் கடனுதவிகளையும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.500/ மதிப்பீட்டிலான தாது உப்பு கலவைகளையும் என ஆக மொத்தம் 139 பயனாளிகளுக்கு ரூ.36,91,917/ மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா. வானதி, சிவகங்கை வருவாய் கோட் டாட்சியர் விஜயகுமார், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கோமதி, சாலூர் ஊராட்சி மன்றத்தலைவர் நாச்சம்மாள், சிவகங்கை வட்டாட்சியர் சிவராமன் மற்றும் அனைத்து துறை அரசு முதல்நிலை அலுவலர்கள், பொதுமக்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் செயற்குழு கூட்டம்

ஈரோடு, டிச. 12

வணிகவரித்துறை வரி செலுத்துவோர் கூட்டத்தை விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் 11வது செயற்குழு கூட்டம் நேற்று இரவு நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு கூட்டமைப்பின் தலைவர் வி.கே.ராஜமாணிக்கம் தலைமை வகித்தார். கூட்ஸ் டிரான்ஸ்போர்ட் லாரி ஓனர்ஸ் அசோசியேசன் தலைவர் செந்தில் ராஜா வரவேற்றார்.

ஈரோடு ப்ளீச்சிங் ஒர்க்ஸ் ஓனர்ஸ் அசோசியேசன் தலைவர் பெரியசாமி முன்னிலை வகித்தார். அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் செயலாளர் ரவிச்சந்திரன் வேலை அறிக்கை சமர்ப்பித்தார். பொருளாளர் முருகானந்தம் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தார்.

இக்கூட்டத்தில், ஆடிட்டர் கிருஷ்ணசாமி சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று ஜிஎஸ்டி குறித்து விளக்க உரையாற்றினார். தொடர்ந்து இக்கூட்டத்தில், ஈரோடு மாவட்டத்தில் வணிக வரித்துறை வரி செலுத்துவோர் கூட்டம் கடந்த ஒரு வருடமாக நடைபெறவில்லை, தற்போது உள்ள வாடகை மீதான 18 சதவீதம் ஜிஎஸ்டி, துணிக்கு 28 சதவீதம் ஜிஎஸ்டி என பல வரி உயர்வுகள் உள்ளன. எனவே வரி செலுத்துவோர் ஆலோசனைக் கூட்டத்தை விரைவில் நடத்தி, வணிகர்களிடம் கருத்துகளை கேட்டு அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கரூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் கொடுமுடி வணிக வரி துறை வட்டார அலுவலகத்தை ஈரோடு, ஆனைக்கல்பாளையத்தில் உள்ள புதிய வணிகவரித்துறை அலுவலகத்திற்கு மாற்றி தர வேண்டும்.

சோலார் மின் உற்பத்தி குறைந்து வருவதை தடுக்க அதன் மீதான நெட்வொர்க் சார்ஜை முழுவதுமாக நீக்க வேண்டும். டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கான கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161